[1984 மார்ச் 5

கன்னியாகுமரி மாவட்டத்தில் இயங்கும் குழந்தைகள் காப்பகங்கள்.

170—(*வினா எண். 17037)—திரு. ஜே. ஹேமச்சந்திரன்: மாண்புமிகு சத்துணவுத் திட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனின் கீழ் இயங்கும் குழந்தைகள் காப்பகங்கள் எவ்வளவு?

(ஆ) இக்குழந்தைகள் காப்பகங்களைத் தேர்வு செய்வதற்கு அரசு பின்பற்றி வரும் நடைமுறைகள் என்ன?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்: (அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் ஊராட்சி ஒன்றியங்களின் கீழ் இயங்கும் குழந்தைகள் நல மையங்களின் எண்ணிக்கை பின்வருமாறு:—

வரிசை எண்ணும் ஒன்றியத்தின் பெயரும். (1)	மையங்களின் எண்ணிக்கை. (2)
1. ராஜாக்கமங்கலம்	46
2. மேல்புறம்	63
3. திருவட்டார்	64
4. அகஸ்தீஸ்வரம்	55
5. கிள்ளியூர்	57
6. முஞ்சிறை	100
7. தோவாளை	41
8. தக்கலை	77
9. குருந்தங்கோடு	76
ஆகமொத்தம்	579

(ஆ) வறுமைக்கோட்டிற்கு கீழுள்ள குடும்பங்களிலுள்ள 2 லிருந்து 4 வயதுக்குட்பட்ட குழந்தைகள் பயன்பெறும் வகையில் 70-லிருந்து 150 குழந்தைகளுக்கு ஒரு மையம் என்ற கணக்கில் 70 குழந்தைகளுக்கு மேலுள்ள அனைத்து கிராமங்களிலும் மையங்கள் திறக்க வகை செய்யப்பட்டுள்ளது. ஒவ்வொரு கிராமத்திலும் அனைத்து இனத்தவரும் பயன்பெறும் வண்ணம் மையம் அமைத்திட வகை செய்யப்பட்டுள்ளது.

திரு. டி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த குழந்தைகள் காப்பகத்திலும் ஆயாக்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். நண்பகல் உணவு திட்டத்திலும் ஆயாக்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆனால் குழந்தைகள் காப்பகத்

984 மார்ச் 5]

தில் பணிபுரியும் ஆயாக்களுக்குக் கொடுக்கப்படும் சம்பளத்தில் மட்டும் வித்தியாசம் இருக்கிறது. எனவே, குழந்தைகள் காப்பகத்தில் இருக்கிற ஆயாக்களுக்கு சம்பளத்தை உயர்த்துவதற்கு, அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்திலே இருக்கும் குழந்தைகள் நல மையங்கள் எத்தனை என்பது பற்றியும் அந்த மையங்களை எப்படி தேர்வு செய்கிறோம் என்பது பற்றியும் கேட்கப்பட்டிருக்கிற கேள்வியாகும். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனிக் கேள்வி போட்டால் விவரங்களை விளக்கமாகத் தரமுடியும்.

வேதாரண்யம் ஒன்றியம் வாய்மேடு கால்நடை மருந்தகத்திற்கு கட்டிடம்

171—(*வினா எண். 17686)—திரு. எம். எஸ். மாணிக்கம் : மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம் வேதாரண்யம் ஒன்றியம் வாமேடு கால்நடை மருந்தகம் ஒன்றியத்தின் கடைக்கோடியில் கட்டப்படுவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதை நிறுத்தி எல்லோருக்கும் பயன்படும் வகையில் கிராமங்களின் மத்தியில் அமைக்கப்படுமா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : (அ) மற்றும் (ஆ) : வேதாரண்யம் ஒன்றியம் (வாய்மேடு) என்ற இடத்திலுள்ள கால்நடை மருந்தகத்திற்கு நிரந்தர கட்டிடம் கட்டுவதற்காக சர்வே எண். 369/3 என்ற இடம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. அந்த இடம் கிராமத்தின் மையத்தில் உள்ளது. அத்தோடு அந்த இடம் பக்கத்து கிராம மக்களுக்கும் உபயோகமாகவும், தண்ணீர் வசதி கொண்டதாகவும் காணப்படுகிறது.

திரு. எம். எஸ். மாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பக்கத்து கிராம மக்களுக்கும் பயன்படும் வகையில் இதனைக் கட்டுவதற்கு நடவடிக்கை எடுத்திருப்பதற்காக நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இந்தக் கட்டிடத்தை விரைவில் கட்ட வேண்டும். ஆகவே இது சம்பந்தமாக அங்கே வழக்கு மன்றத்தில் இருக்கக்கூடிய வழக்கை துரிதமாக நடத்தி, விரைவில் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS